REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆவணி 6உ வியாழன் (22—8—57) ★ ★ வெளியூர்: ஆவணி 7உ வெள்ளி (23—8—57) [இதழ் 59

ரூ. 71 இலட்சம் பெறுமான பாதரட்சைகள் ரஷ்யாவிற்கு ஏற்றுமதி

புதுடில்லி, ஆக. 21—

1957 ஜுன் திங்கள் முடிய ரஷ்யாவிற்கு, இந்தியாவிலிருந்து ரூ. 71,73,000 பெறுமான பாதரட்சைகள் ஏற்றுமதியாயின என்று வர்த்தக மந்திரி கனுங்கோ கூறியிருக்கிறார்.

மேலும் இதற்கான ஒப்பந்தமும் ஏற்பாடாகியிருப்பதாகவும் அவர் கூறினர்.

நெய்வேலி திட்டத்திற்கு கம்யூனிஸ்டு எதிர்ப்பு

மக்கள் சபையில் ஆந்திர உறுப்பினர் கடும் தாக்குதல்

பழுப்பு நிலக்கரி தோண்ட செலவாகும் பணம் அத்தனையும் பாழாகுமாம்

நெய்வேலித் திட்டத்திற்கு கம்யூனிஸ்டுகள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர்.

அண்மையில் மக்கள்சபையில் நடைபெற்ற ஒரு விவாதத்தின் போது, ஆந்திராவைச் சேர்ந்த கம்யூனிஸ்டான வித்தல்ராவ் என்ற எம். பி., நெய்வேலித் திட்டத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசியிருக்கிறார்.

'பொருளாதார ரீதியாகப் பார்த்தால், நெய்வேலித் திட்டத்திற்குச் செலவிடும் பணம் அத்தனையும் பாழானது' என்று பொருள்பட அவர் பேசினாராம்!

அவர் கூறியதாவது :—

"நெய்வேலி பழுப்புநிலக்கரிச் சுரங்க வேலைக்கு, ரூ. 16 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன்படி மூலதனச் செலவைக் கணக்கிட்டால், டன் ஒன்றுக்கு ரூ. 50 ஆகிறது. ஆனால், புதிய நிலக்கரிச் சுரங்கம் ஒன்றைத் துவக்கி வேலை செய்தால் டன் ஒன்றுக்கு ரூ. 30 அல்லது ரூ. 40 தான் ஆகும். பழுப்புநிலக்கரியின் எரி சக்தியைப்போல, நிலக்கரியின் எரி சக்தி இரண்டரை மடங்காகும்; எனவே, நெய்வேலியில் முதலீடு செய்த பெருந்தொகையை வேறு எங்காவது நிலக்கரிச் சுரங்கத்தில் ஈடு செய்திருந்தால், நெய்வேலியில் கிடைப்பதைப் போன்று இரண்டரை மடங்கு நிலக்கரி சர்க்காருக்குக் கிடைத்திருக்கும்.

"எனவே, இந்தியா முழுவதிலும் ஏராளமான நிலக்கரிப் படிவங்கள் இருக்கின்றன. தென்னாட்டில்கூட சிங்கரேணி நிலக்கரி வயல் இருக்கிறது என்பதால், நெய்வேலியில் இவ்வளவு பெரிய முதலீடு செய்தது பற்றி புனராலோசனை செய்யவேண்டும்."

கம்யூனிஸ்டின் எதிர்ப்புக்கு மந்திரி தந்த பதில்

'நெய்வேலித் திட்டம் சரியானதே'

நெய்வேலித் திட்டத்திற்கு கம்யூனிஸ்டு எம். பி. தெரிவித்த எதிர்ப்புக்குப் பதிலளித்து மந்திரி சர்தார் ஸ்வரன் சிங் மக்கள்சபையில் பேசியிருக்கிறார்.

'நெய்வேலியில் முதலீடு செய்தது நியாயமானதே' என்றார் அவர்!

"பழுப்பு நிலக்கரியைவிட நிலக்கரியின் எரிசக்தி அதிகம் என்பது உண்மைதான்; ஆனால், தென்னாட்டிற்கு நிலக்கரி, வெகு தூரத்திற்கு அப்பால் உள்ள பீகாரிலிருந்தும் ராணிகஞ்சிலிருந்தும் வரவேண்டியிருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. தென்னாட்டிற்குத் தேவைப்படும் ஏராளமான நிலக்கரி, வெகு தொலைவிலிருந்து, கடல் மூலம் பெரும் செலவில் எடுத்துச் செல்லப்பட வேண்டியிருக்கிறது. எனவே, உள்ள சூழ்நிலைகளில் இதற்குள்ள சிறந்த பரிகாரம் தென்னாட்டின் வளங்களையே பயன்படுத்திக் கொள்வதுதான்."

இவ்வாறு, மந்திரி பதிலளித்திருக்கிறார்.

'பல பிரதேசங்களும் ஒரே சீரான வளர்ச்சிபெற வழி வேண்டும்'

'இல்லையேல் ஆபத்தான விளைவு தோன்றும்'

'இரும்பு-உருக்குத் தொழிற்சாலைகளைத் தென்னாட்டில் அமைக்காதது ஏன்?'

மக்கள் சபையில் பெல்லாரி உறுப்பினர் கேள்வி

பிரதேசங்களிடையே தொழிலபிவிருத்தியில் பெரும் பிளவு இருப்பது—நீடிப்பது ஆபத்தான விளைவுகளைக் கொண்டது என்ற எச்சரிக்கை, டெல்லிப் பெரியவர்களுக்கு மக்கள் சபையில் பல முறை தரப்பட்டிருக்கிறது.

இந்த முறை, பெல்லாரியைச் சேர்ந்த தெக்கூர் சுப்பிரமணியம் என்ற உறுப்பினர் இந்த எச்சரிக்கையைத் தந்திருக்கிறார்.

"பல பிரதேசங்களும் ஒரே சீராக வளர்ச்சியடைவதற்கான திட்டங்கள் வேண்டும்.

"தென்னாட்டிலும் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் நிறுவப்படல்வேண்டும்.

"பெல்லாரி மாவட்டத்தில் குறிப்பாக சாந்தூரில் கிடைக்கும் இரும்புக் கனிகள் மிக உயர்ந்தரகத்தைச் சேர்ந்தவையாகும். இந்தக் கனிகளை அண்மையில் ஆராய்ந்த ரஷ்ய நாட்டு நிபுணரான லோராவ் என்பார், சாந்தூர் இரும்புக் கனிகள் உலகிலேயே மிக வளமானவை என்று கருத்தறிவித்திருக்கிறார்.

"எனவே, பிரதேச அபிவிருத்தியில் சர்க்கார் கவனம் செலுத்தாவிடின், அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் பகுதி மக்களிடை பெரும் அதிருப்தி ஏற்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்"

என்று தெக்கூர் சுப்பிரமணியம் அவர்கள் முழங்கியிருக்கிறார்.

நாளை!

டெல்லி மக்கள் சபையில் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 20—8—57-ல் ஆற்றிய உரையின் முழு விவரம் நாளை (23—8—57) 'நம்நாடு' இதழில் வெளிவரும்.

வெளிநாடுகளில் பயிற்சிபெறும்

இந்திய விஞ்ஞானிகள்

விவரம் சேகரிக்கப்படுமாம்

புதுடில்லி, ஆக. 21—

வெளிநாடுகளில் கல்வி அல்லது பயிற்சிபெற்றுவரும் இந்திய விஞ்ஞானிகள், தொழில்நுணுக்க வல்லுநர்கள் சம்பந்தமான விரிவான விவரங்களைச் சேகரிக்க அரசினர் நடவடிக்கை எடுத்துவருகிறார்களாம்.

மக்கள்சபையில் அமைச்சர் பி. என். தத்தார் இத்தகவலைத் தந்தார்.

திருத்தம்

இன்றைய 'நம்நாடு' தலையங்கத்தில் இரண்டாவது கலத்தில், "பிறகு கல்லணையில்..." எனத் துவங்கும் பாராவிலிருந்து " 'நங்கவரம்' அதற்கு இணங்கவில்லை" என்று முடிய உள்ள பகுதிகள் குளித்தலை வட்ட விவசாயிகள் முன்னேற்ற சங்கம் விடுத்துள்ள அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நங்கவரம் அக்கிரமம்!

நாட்டினரே காணீர்! நியாயம்தர வாரீர்!

★

2,000

உழவர் குடும்ப உரிமை பறித்து

வயிற்றில் அடிக்கிறார் பண்ணையார்!

★

23-8-57

உழவர்கள் உரிமை பெற

அறப்போர்!

★

இதயமுள்ளோரே! துணை நிற்பீர்!

—விவசாயிகள் முன்னேற்ற சங்கம்,
குளித்தலை வட்டம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

'தோல்வியுறுமென திட்டக்குழு தெரிவித்ததா?'

மக்கள்சபைக் கேள்விக்கு பண்டிதர் பதில்

புதுடில்லி, ஆக. 21—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை அமுல் செய்வதில் உள்ள கஷ்டங்களைச் சமாளிப்பதில், மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் அவர்களது நோக்கத்தில் தோல்வி மனப்போக்கு எதுவும் இருக்கவில்லை என்பதைத் தெளிவாக்க விரும்புவதாக, பண்டித நேரு மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

'திட்டத்தை நிறைவேற்றுவதில் கஷ்டங்கள் இருக்கின்றன என்பது தெளிவு; ஆனால், இந்தியாவின் பொருளாதாரம் உறுதியானதாகவே இருக்கிறது' என்றும் பண்டிதர் கூறினாராம்!

மக்கள் சபையில் எழுந்த கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

'கடந்த ஜுன் திங்களில், திட்டக் குழுவின் பொருளாதாரப் பிரிவினர் பண்டிதருக்கு எழுதிய இரகசியக் கடிதம் ஒன்றில், திட்டம் தோல்வியுற்றுவிட்டதாக ஒரு தகவல் இருந்தது எனச் சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் உண்மையானவைதானா?' என்பதே, எழுப்பப்பட்ட கேள்வி!

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—8—57 வியாழன்

நங்கவரம்:
'செய் அல்லது செத்து மடி'

'செய் அல்லது செத்து மடி' என்ற உரிமை ஒலியுடன் தமது இறுதிச் சுதந்திரப் போரை காந்தியடிகளார் அன்று ஒரு நாள் துவங்கினர். இன்று நங்கவரம் விவசாயப் பெருமக்கள் அதே உரிமை முழக்கத்துடன், தங்கள் வாழ்விற்காக அறப்போர்க் களம்புக இருக்கின்றனர்.

அறப்போர்க் களம்புகும் தீர்மானத்துடன் விவசாயப் பெருமக்கள் இருந்துவிடவில்லை. அவ்வமைதியான பெரும் போர் துவக்கப்படும் நன்னாள், இத்திங்கள் இருபத்திமூன்றும் நாள் என்றும் முடிவு கட்டிவிட்டனர்.

'செய் அல்லது செத்து மடி' என்ற உரிமை முழக்கத்தை முழங்க, நங்கவரம் விவசாயப் பெருமக்கள் தாமாக வலியமுன் வரவில்லை. களம் அமைத்துக் கடும்போர் புரிந்தாலல்லாது தங்கள் உரிமையை இலகுவில் என்றும் பெறமுடியாது என்ற முடிந்த முடிவை, சென்னை அரசாங்கம், நங்கவரம் விவசாயப் பெருமக்கள்மீது வலுவில் திணித்திருக்கின்றது. ஆட்சியாளர் இட்ட கட்டளையைத் தலைமேல் தாங்கி, களம்புக வேண்டிய கதியற்ற நிலையை நங்கவரம் நல்லுழவர் உழத்தியர் முழுவிருப்புடன் ஏற்றுக் கொண்டனர்.

அறப்போர்க் களமானாலும், உழவர் படையினர் புரியும் போர் கொல்லாமையை மற்றும் இன்னா செய்யாமையை உள்ளடக்கமாகக் கொண்டிருக்குமானாலும், அடக்குமுறை ஒன்றை மட்டுமே அளிக்கும் நிலையிலும் அடக்குமுறை ஒன்றை மட்டுமே கொண்டு விளங்கும் நிலையிலும் உள்ள சென்னை அரசாங்கம், அறப்போர்ப் படைவீரர்களை அலட்சியமாபடுத்திவிடும்?

தடை விதிக்கும்; வெளியேற வேண்டும் என்று பசப்பும்; எச்சரிக்கும்; தடியடி வழங்கும்; துப்பாக்கியால் சுட்டுத்தள்ளும்; ஒன்று, இரண்டு, மூன்று என்று தனது திருவிளையாடலுக்கு இரையான மாவீரர்களைக் கணக்கிடும்; எஞ்சியவர்களை சிறையில் தள்ளிப் பூட்டி, தனது கைவண்ணத்தைத் தனக்குத் தானே பாராட்டிக்கொள்ளும் அரசாங்கம். இது, அரசாங்கத்தின் பரம்பரைப் பண்பு!

வாரம் குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் வந்ததும், அறுபது—நாற்பது வாரச் சாகுபடிச் சட்டம் வந்ததும், அவ்விரண்டையும் நடைமுறைக்கு வாராமல் தடுக்கும் திருப்பணியில், நிலப்பிரபுக்கள் வெகு தீவிரமாக ஈடுபட்டனர். அதிலுள்ள ஓட்டையைத் தங்களுக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டு, கை ஏர்—மாட்டு ஏர் வாரதாரர்கள் குத்தகைதாரர்கள் அல்ல என்றும், குத்தகை உடன்பாடு எதுவும் தங்களுக்கும் அவர்களுக்குப் எழுத்துமூலம் ஏற்பட்டிருக்கவில்லை என்றும் திறமையாக உயர் நீதிமன்றத்தில் வாதிட்டு, தங்கள் விருப்பத்திற்கேற்ற தீர்ப்பை நிலப்பிரபுக்கள் பெற்றுவிட்டனர். அத்தீர்ப்பின்படி, நேற்றுவரை தங்கள் நிலத்தில் பயிரிட்டு வந்த கை ஏர்—மாட்டு ஏர் வார குத்தகைதார்களை, முன்னாள் பயிரிட்டு வந்த நிலத்தில் கால் எடுத்துவைக்க முடியாமல் தடுத்துவிட்டனர். அமைதி காப்பது—சட்டத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் தனது பாதுகாப்புப் படைபலத்தை, நிலப்பிரபுக்களுக்கு அளித்து வருகின்றது சென்னை அரசாங்கம். இந்தச் சட்டத் தாக்குதலுக்கு உள்ளாகி அல்லல் பல ஏற்று தொல்லை பல பட்டுவருகின்றவர்கள்தான் நங்கவரம் விவசாயிகள்.

நங்கவரம் நிலப் பிரபுக்கள் பலரின் பிடிவாதத்தையும், ஈவு இரக்கமற்ற செயலையும், சட்ட மன்றத்தில் எடுத்துக்காட்டினார் நமது இளவல் கருணாநிதி. உடனடியாக சட்டத்தின் ஓட்டைகளை அடைத்துவிடும்படி ஆட்சியினரை அதே மன்றத்திலிருந்து நமது இளவல் கோரவும் கோரினார்.

விவசாய அமைச்சரை நேரில் சந்தித்து, நங்கவரம் உழவர்களின் தொல்லையை நீக்கவேண்டும் என்றும் இளவல் கருணாநிதி கோரினார். நங்கவரம் பகுதிக்குத் தாமே வந்து, நிலைமையை நேரில் பார்த்து, நிலப் பிரபுக்களையும் உழவர்களையும் நேரில் விசாரித்து, சமரசத்திற்கு வழி காண்கின்றேன் என்று விவசாய அமைச்சர் நமது இளவலிடமும், அக்குழுவில் இடம் பெற்றிருந்த விவசாயிகள் முன்னேற்ற சங்கத் தலைவர்களான குளித்தலை முத்துகிருட்டினன், கவுண்டம்பட்டி முத்து, திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அம்பில் தருமலிங்கம் முதலியவர்களிடமும் வாக்களித்தார்.

பிறகு கல்லணையில் அமைச்சரைக் கருணாநிதியின் தலைமையில் தூதுக் குழு சந்தித்தது. அமைச்சர் அதிகாரிகளிடம் பொறுப்பை ஒப்படைத்தார். 'கூலிகள்' என எழுதிக்கொடுத்து நிலத்தில் இறங்க வேண்டியதில்லையென்றும், பழைய முறைமையை அனுசரித்து சென்ற ஆண்டுபோல நடந்து கொள்ளலாமென்றும், அப்படி ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளலாமென்றும் அமைச்சர் முடிவு தெரிவித்தார். விவசாயிகள் சம்மதித்தனர் அதற்கு!

பிறகு "நங்கவரம்" பின்வலித்துக்கொண்டு, இந்த வகை சமரசத்திற்கு உடன்பட மறுத்தது.

இறுதியாக இம்மாதம் 11-ந் தேதி குளித்தலையில் விவசாய அமைச்சரைத் தூதுக் குழு சந்தித்தது. சமரச ஏற்பாடு காணவே முயன்றோம். "நங்கவரம்" தன் பிடிவாதத்தை மாற்றிக்கொள்ளவில்லை. பழைய ஏற்பாட்டுக்கு சென்ற ஆண்டு போலவே பாடுபடுகிறோம் என சம்மதித்தும் "நங்கவரம்" அதற்கு இணங்கவில்லை.

மன்னார்குடியிலிருந்தும், மலபார் பகுதியிலிருந்தும் 'கருங்காலி'களைக் கொண்டு வந்து 'நங்கவரம்' பயிர் செய்து கொள்ளுகிறது. நேற்றுவரை தங்களால் உரிமையுடன் பயிர் செய்யப்பட்டுவந்திருந்த நிலத்தில் 'கருங்காலி'கள் பயிர் செய்வது கண்டு, நங்கவரம் விவசாயப் பெருமக்கள் பெருமகிழ்வா கொள்ள முடியும்?

இதன் விளைவு—முடிவு—நங்கவரம் அறப்போர்.

நங்கவரம் விவசாயப் பெருமக்களிடை திணிக்கப்பட்டுள்ள அல்லலை அரசாங்கம் அறிந்தே இருக்கின்றது. அவ்வுண்மையை முதலமைச்சர் நன்கு உணர்ந்திருக்கின்றார் என்பது பேச்சிலிருந்தே நன்கு விளக்கமாகிறது.

"நிலச் சோந்தக்காரர்கள் பரம்பரை விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுகிறார்கள் என்ற குரலை இந்த வட்டத்தில் குளித்தலையிலும் லால்குடியிலும்தான் கேட்கின்றேன். இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் விரைவில் செய்து முடிக்கப்படும். ஏனெனில் விவசாயிகளுக்கு இது உணவுப் பிரச்சினையாகும்."

இவ்வாறு முதலமைச்சர் குளித்தலையில்தான் கூறியிருக்கின்றார்.

'இதற்கு வேண்டிய ஏற்பாடு விரைவில் செய்யப்படும்' எனத் தாம் குறிப்பிட்டிருப்பதை உடனடியாகசெயலாற்ற அவர்விரும்புவாரானால், அதை ஒரு அவசரச் சட்டம் மூலம் உடனடியாக நிறைவேற்றி வைக்கலாம். அல்லல்பட்டுவரும் நங்கவரம் விவசாயிகள் அறப்போர் களம் புகுமுன், அவசரச் சட்டம் பிறப்பிக்க முதலமைச்சர் முன்வருவாரா என்பதுதான் நமது கேள்வி.

குறிப்பிட்ட பருவத்தில்தான் நிலத்தை உழுவதும், வித்திடுவதும், நாற்று நடுவதும் நடைபெற்றாகவேண்டும். கைத்தொழில் துறை போன்று நாளைக்குச் செய்யலாம் மறுநாளைக்குச் செய்யலாம் என்று காலங்கடத்தும் போக்கு விவசாயத்துறைக்கு ஒவ்வாது. பருவத்தோடு பயிர் செய்வதற்கான உரிமையை, நங்கவரம் விவசாயப் பெருமக்கள் இன்றே அதுவும் இன்னே பெற்றாகவேண்டும். அதை முடித்து வைக்கும் கருத்துடன் முதலமைச்சர் 'விரைவில்' ஒரு ஏற்பாடு, அதாவது அவசரச் சட்டம் போடுவாரா?

பொதுமக்கள் நலனுக்கு ஏற்றதல்லவாம்!

புதுடில்லி, ஆக. 20—

'அண்மையில், ஜம்மு-காஷ்மீர் பகுதிக்குள் நுழைய பாகிஸ்தானியர்கள் முயன்றது குறித்து மேற்கொண்டு ஏதேனும் தகவல் கிடைத்துள்ளதா?' என்ற கேள்விக்கு, 'ஆமாம்' என்றும், 'அதை தடுக்க, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?' என்ற மற்றொரு கேள்விக்கு 'அதை இங்கு வெளியிடுவது பொதுமக்கள் நலனுக்கு ஏற்றதல்ல' என்றும் மத்திய அமைச்சர் தத்தார் மக்கள்சபையில் கூறியுள்ளார்.

ஐந்தாண்டு திட்டம் திருத்தப்படுமா?
தீவிரமாக ஆராய்கிறார்களாம்!

புதுடில்லி, ஆக. 21—

ஐந்தாண்டுத் திட்டத்தில் மாற்றங்கள் செய்வது பற்றி இப்பொழுது திட்டக் குழு தீவிரமாக ஆராய்ந்துவருகிறதாம்! விலைவாசிகள் ஏறிவருவதும், அன்னிய செலாவணியில் சங்கடங்கள் இருப்பதுமே இதற்குக் காரணமாம்.

எனவே, திட்டத்தில் திருத்தங்கள் செய்ய ஏதேனும் உருவான யோசனைகள் வெளியிடப்பட்டால் சபையில் அது குறித்து விவரம் சமர்ப்பிக்கப்படுமென்று திட்ட அமைச்சர் நந்தா மக்கள்சபையில் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டிலும், அடுத்த ஆண்டிலும் எந்தெந்த வேலைகளுக்கு முதலிடம் தருவது என்பது குறித்து வரிசைக்கிரமம் அமைக்கப்பட்டு வருவதாகவும், இவ்வேற்பாடு அன்னிய செலாவணி நிலைமைக்கு ஏற்றபடியே செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினர்.

தென்னாட்டிற்கு இந்தியப் பேரரசு இழைத்த வஞ்சகம்!
மக்கள் சபையில் அம்பலமாகிறது

புதுடில்லி, ஆக. 21—

இந்திய விடுதலைப் போரின் நூற்றாண்டு விழாவையொட்டி, மத்திய அரசாங்க விளம்பர இலாகாவால் எழுத்துமூலம் தயாரிக்கப்பட்ட (டாகுமெண்டரி) திரைப்படம் ஒன்று நாடெங்கும் திரையிடப்பட்டது நினைவிருக்கலாம். நாட்டின் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள், வரலாற்றுச் சிறப்புப் பெற்ற இடங்கள் முதலிய விவரங்கள் ஒன்று திரட்டப்பட்டு அப்படத்தில் காட்டப்பட்டன.

'வடநாடு—தென்னாடு என்று பேசுவானேன்? இந்தியா ஒரே நாடு' என்று இன்னும் சிலர் பேசி வருவதற்குப் புத்தி புகட்டும் தன்மையில் அரசாங்க விளம்பர இலாகா வெளியிட்டுள்ள அந்தப் படம் அமைந்துள்ளது.

மக்கள் சபையில் அந்தப் படத்தைப்பற்றிப் பேசுகையில் பூபேஷ்குப்தா என்ற உறுப்பினர் குறிப்பிட்டதாவது:—

"திரைப்படத்தைத் தயாரிப்பதற்குமுன் பொது மக்களுடைய கருத்தை நன்கு அறியவேண்டும் என்பதைத்தான் இப்படம் எடுத்துக்காட்டுகிறது. சுதந்திரப் போராட்டத்தை விளக்கும் இந்தப் படம், 'தென்னாடு சுதந்திரப் போராட்டத்தில் பங்குகொள்ளவே இல்லை' என்பதுபோல இந்திய அரசாங்க விளம்பர இலாகா கருதிக்கொண்டு, ஒரு சிறு குறிப்பைக்கூட தென்னாட்டைப் பற்றிக் காட்டாமல், சுதந்திரப் போராட்டம் பற்றிய படத்தைத் தயாரித்துள்ளது; விளம்பர இலாகாவின் 'திறமை'க்கு இப்படமே ஒரு சான்றாகும்."

உணவு நெருக்கடியும் துணிப் பங்கீடும்!

பீகிங், ஆக. 20—

சென்ற ஆண்டில் சீனாவில் நல்ல விளைச்சல் இல்லாத காரணத்தினாலும், இந்த ஆண்டில் பயிரிடப்பட்டுள்ள நிலப்பகுதி குறைவாக இருப்பதாலும், கடந்த ஏப்ரல் திங்களில் கோடைக் காலத்தின்போது பங்கீடுமுறை முதன் முதல் அமுலாக்கப்பட்டு குழந்தைகள் உடை, கொசுவலை, மற்றும் சிறிய துணிகள் ஆகியவைகளும் குறைக்கப்பட்டன.

இப்போது மீண்டும் பங்கீட்டில் வெட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 65 கோடி சீனர்களுக்கும், பருத்தி ஆடை பங்கீட்டில் மூன்று முதல் ஆறு அடி குறைக்கப்பட்டுள்ளது; எனவே, இப்போது நபருக்கு 19 முதல் 21 அடி நீளம் பருத்தித் துணியே கிடைக்கும்.

உணவு நெருக்கடியைச் சமாளிக்க, பருத்தி விளையும் 10,00,000 ஏக்கர் நிலத்தில் உணவுத் தானியம் பயிரிடப்படுவதே இதற்குக் காரணமாம்.

கேரளத்தின் ஆற்றுநீர்ப் பிரச்சினை
பேச்சுவார்த்தையை ஒத்திவைக்கக் கோரிக்கை

திருவனந்தபுரம், ஆக. 21—

கேரளத்தில் ஓடி வீணாகும் ஆற்றுத் தண்ணீரை, தமிழ்நாட்டுக்குப் பயன்படுத்துவது குறித்து, கேரள அமைச்சர்களுடன், சென்னை அமைச்சர்கள் செப்டம்பர் முதல் வாரத்தில் பேச்சு நடத்த இருப்பதாக முன்னர் செய்திவந்தது நினைவிருக்கலாம்.

அப்பேச்சுவார்த்தை முன்பு குறிப்பிட்டபடி செப்டம்பர் முதல் வாரத்தில் நடக்காது என்று இப்பொழுது தெரியவருகிறது.

செப்டம்பர் 15-ந் தேதிக்குப் பிறகு அந்தப் பேச்சைத் துவக்கலாமென சென்னை அரசாங்கத்துக்குக் கேரள அரசாங்கம் இப்பொழுது அறிவித்திருக்கிறதாம்.

தப்பிப் பிழைத்தது படத் தொழில்!

டில்லி, ஆக. 21—

சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் மத்திய அரசாங்க விளம்பர அமைச்சர் கேஸ்கர், திரைப்படத் தொழில் சட்டம் ஒன்றை மக்கள் சபையில் கொண்டுவந்தார்; அந்தச் சட்டத்தின் மூலம் இன்று சுயேச்சையாக இயங்கிவரும் திரைப்படத் தொழில் பாதிக்கப்பட்டு, பல உரிமைகளை இழக்க வேண்டியநிலையும் டில்லி ஆட்டிவைப்பதுபோல ஆடவேண்டிய கெடுபிடியும் ஏற்படக்கூடிய நிலை இருந்தது. அத்தகைய ஆபத்தை உணர்ந்து நாடெங்கும் திரைப்படத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கண்டனக் குரலெழுப்பினர். அதன பயனாக மக்கள் சபையில் அந்தச் சட்டத்தை அமைச்சர் கேஸ்கர் இப்போது திரும்பப் பெற்றார்.

இந்தியப் பேரரசுக்கு இப்போது உள்ள பொருளாதார சீர்குலைவைக் கருதி, ஒரு தேசீயத் திரைப்பட நிறுவனம் ஏற்படுத்துவது அவசியமற்றது என்று விளம்பர இலாகா கருதுகிறதாம்!

இந்தச் சட்டத்தை வாபஸ் பெறாதிருந்தால் திரைப் படத்துக்கான கதையைப் பற்றி முடிவு செய்யும் அதிகாரம்கூட அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்!

சிங்கப்பூர், மலாயா நாடுகளில் பொன்னம்பலனர்

கடல் கடந்த தமிழர்தரும் மகத்தான வரவேற்பு

‘ஒருவனைச் சாமி எனத் துதிப்பதும் மற்றவனைச் சண்டாளன் என மிதிப்பதும் வேண்டாம்’

‘வேற்றுமைகளை விடுத்து ஒன்றுபடுவீர்’

‘சமுதாய மறுமலர்ச்சி காண முற்படுவீர்’

வரவேற்புச் சிறப்புக் கூட்டங்களில் தி. மு. கழகக் கொள்கை விளக்கம்

சிங்கப்பூர். ஆக. 15—

கடந்த ஜூன் மாதத் துவக்கத்தில் திராவிடத்தினின்றும் இங்கு வந்து சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருக்கும் தோழர் அ. பொன்னம்பலனர் அவர்களுக்கு இங்குள்ள பல்வேறு சங்கங்கள், தனிப்பட்டவர்கள் சார்பில் மகத்தான வரவேற்புகள் அளிக்கப்பட்டுவருகின்றன. இங்கு வதியும் தமிழ் மக்களுக்குத் தோழர் பொன்னம்பலனர் அரிய கருத்துரைகளை வழங்கி வருகிறார்கள்.

தமிழர் சீர்திருத்தச் சங்கத்தில் சொற்பொழிவு

15—6—57-ல், சிங்கப்பூர் தமிழர் சீர்திருத்தச் சங்கச் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில், ‘சமூகச் சீர்திருத்தம்’ என்ற தலைப்பில் தோழர் பொன்னம்பலனர் அரிய கருத்து விருந்தளித்தார்.

இக்கூட்டத்திற்கு, ‘தமிழ் முரசு’ ஆசிரியர் திரு. கோ. சாரங்கபாணி தலைமை வகித்தார்.

கூட்டத் துவக்கத்தில் சிங்கப்பூர்-4, கல்கத்தாசாலையில் வாழும் கூப்பாச்சிக் கோட்டை கிராம மக்களின் சார்பில் மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், தோழர்கள் தமிழர் பிரதிநிதித்துவ சபைப் பொதுச்செயலாளர் எம். எம். மாலை, பேராசிரியர் மு. அரசங்கண்ணனர், ஆர். எம். கிருஷ்ணன், தாமோதரம் பிள்ளை, சிரம்பான் இராம-சின்னையா, சிரம்பான்ரத்தினம் முதலிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

தோழர் பொன்னம்பலனர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

“சீர்திருத்தப்பணிக்கு சமுதாய நலம்தான் எழுச்சி தருவது. சீர்கேடுகளைப் போக்க வேண்டுமென்பதுதான் சீர்திருத்தம்.

“சமுதாயத்தில் இன்றியமையாதவர்களாக இருக்கும் உழைப்பாளிகளை மேல்—கீழ் என்று கூறிப் பிரித்துவைப்பதை ஒதுக்கிவிட்டுச் சமுதாய முன்னேற்றம், வாழ்வின் இன்பம், மறுமலர்ச்சி ஆகியவற்றை முன்னிறுத்தி ஒன்றுபடுத்துவது எங்கள் சமுதாயப் பணி.

“மலத்தைத் தொட்டுவிட்டால், ‘கையைக் கழுவிவிட்டால் போகிறது’ என்று கருதும் அதே மனிதன், இன்னொரு மனிதனைத் தொட்டுவிட்டால் ‘குளித்தால்தான் தீட்டுபோகும்’ என்பது என்ன நியாயம்?

“மதம், சாதி, சமயம் என்ற பெயரால் மக்களுக்குள்ள மாச்சரியம் மாற வேண்டும் என்றால், கடவுளை நிந்திப்பதாகக் கூறிவிடுவதா? ‘மதமெனும் பேய் பிடியாதிருக்க வேண்டும்’ என்று இராமலிங்க அடிகளார்கூடக் கூறியிருக்கிறாரே! நடைமுறையில் கொண்டகொள்கையில் உறுதிகொண்டு சாதி பேதங்களை ஒழிக்க நாம் ஒன்றுபட வேண்டும். ‘ஒருவனை சாமி என்று துதியாதே; மற்றொருவனை சண்டாளன் என்று மிதியாதே’ என்றுதானே நாங்கள் கூறுகிறோம்?”

★

சிரம்பான் தமிழர்கள் விருந்து

26—6—57-ல், சிரம்பான் மாவட்டத் தமிழர்களால் திரு. பொன்னம்பலனர் அவர்கட்கு ஒரு தேநீர் விருந்து அளிக்கப்பட்டு வரவேற்பளிக்கப்பட்டது.

வரவேற்புக் கூட்டத்துக்கு கவுன்சிலர் திரு. சா. சாத்தப்பன் தலைமை வகித்தார். திரு. இரா. தங்கு வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. ம. க. கோவிந்தசாமி சிரம்பான் தமிழர்கள் சார்பில் ஒரு வரவேற்பு மடல் வாசித்தளித்தார். அடுத்து தலைவர் சாத்தப்பன் அவர்கள் திரு. பொன்னம்பலனருக்கு மாலையணிவித்து பாராட்டிப் பேசினர்.

பின்னர், முதியோர் கல்வி அதிகாரி திரு. எம்.பி. அருணன், பாரதி பதிப்பக உரிமையாளர் திரு. சின்னையா ஆகியோர் திரு. பொன்னம்பலனரின் சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

மற்றும் திரு. பன்னீர்செல்வம், திரு. ஆ. இலட்சுமணன், ஆகியோரும் பேசினர்.

திரு. பொன்னம்பலனர் தனக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துவிட்டு அரிய கருத்துரை வழங்கினர்கள்.

திரு. ப. ஆ. முருகேசு நன்றி கூற விழா இனிது முடிந்தது.

★

திராவிடர் கழக வரவேற்பு

9—7—57 அன்று இரவு அகில மலாயா திராவிடர் கழகம் கோலக்கிள்ளான் கிளையின் செயற்குழுக் கூட்டம் தோழர் கி. குருசாமி தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், பொன்னம்பலனர் அவர்களுக்கு திராவிடர் கழகச் சார்பில் ஆகஸ்டு திங்கள் இறுதியில் ஒரு தேநீர் விருந்தும், பாராட்டுக் கூட்டமும் நடத்துவதென ஒரு மனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

★

சிங்கப்பூர் தி. மு. கழகம், தமிழர் சீர்திருத்த சங்கம் வரவேற்பு

21—7—57 அன்று இரண்டு இடங்களில் தோழர் பொன்னம்பலனருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. சிங்கை திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில், நியூ ஓர்ல்டு தஞ்சோங் பூங்கா நடன அரங்கில் திரு. வை. திருநாவுக்கரசு தலைமையில் நடந்த மாபெரும் கூட்டத்தில் ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது.

அன்று மாலை புக்கிட்தீமா 10-வது மைலில் தமிழர் சீர்திருத்த சங்க புக்கிட்தீமா கிளையின் சார்பில் சமூக நிலைய மன்றத்தில் த. பி. சபைப் பொதுச்செயலாளர் திரு. எம். எம். மாலை தலைமையில் ஒரு பாராட்டு—வரவேற்பு வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டில் இயங்கும் தி.மு. கழகத்தின் பிரச்சினைகள் இங்குள்ள தி. மு. கழகத்துக்குக் கிடையாது என்றும், ஆகவே, இங்குள்ள அமைப்பில் காணும் சமுதாய சேவைக்கு முன்னின்று பணிபுரிக என்றும் திரு. பொன்னம்பலனர் அறிவுறுத்தினர்.

துவக்கத்தில் தி. மு. க. செயலாளர் தோழர் சிங்காரவேலு இங்குள்ள தி மு. கழகம் கட்டுப்பாடானமுறையில் செயலாற்றி வருகிறது என்றும், தமிழர் ஒற்றுமை கருதி தமிழர் எல்லோரும் ஒன்று சேரும் ஒரே ஸ்தாபனம் அமையுமானல் அப்போது தி. மு. கழகத்தைக் கலைத்துவிட்டு அதில் ஒரே ஸ்தாபனமாகத் தொண்டாற்றத் தயார் என்றும் கூறினர்.

தலைமையுரையாற்றிய திரு. வை. திருநாவுக்கரசு, தி. மு. கழகம் தமிழர் நலன்களுக்கான செயலில் துணைநின்று வருவதைப் பாராட்டினர். தி. மு. க. போன்ற 40—50 சங்கங்கள் இணைந்து இயங்கும் த. பி. சபை ஓரளவு தமிழர் ஒற்றுமையில் பலன் கண்டுவிட்டது என்றும் குறிப்பிட்டார்.

தி. மு. கழகச் சார்பில் திரு. முருகானந்தம் அவர்களால் திரு. பொன்னம்பலனருக்கு வரவேற்புரை வாசித்தளிக்கப்பட்டது. திரு. சோமசுந்தரம் நன்றி கூறினர். தஞ்சம்பகார் பகுதித் தமிழர் சார்பில் மலர் மாலையும், வரவேற்பு மடலும் திரு. கோபாலன் அவர்களால் அளிக்கப்பட்டன.

மற்றும் கண்டிதம்பேட்டை கல்விக் கழகம், நாமக்கல் தாலூகா நலனபிவிருத்திச் சங்கம், திரு. வி. க. நாடக மன்றம், ஆகியவற்றின் சார்பிலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தமிழர் சீர்திருத்த சங்கம் நடத்திய வரவேற்புக் கூட்டத்தில் திரு. சேகர் வரவேற்புரை வாசித்தளித்தார். மலாயா இந்தியர் காங்கிரஸ் புக்கிட்தீமா கிளை சார்பில் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

சிங்கப்பூர் செல்வி இலக்குமியின் நடனமும், ஆனந்த நாடக சபாவின் சார்பில் செல்வி சாவித்திரியின் நடனமும் நடைபெற்றன.

நடனமாடிய செல்விகளுக்கு ‘தமிழ் முரசு’ ஆசிரியர் கோ. சாரங்கபாணி பரிசுகள் வழங்கினர். இறுதியில் புக்கிட்தீமா சங்க செயலாளர் திரு. அண்ணமலை நன்றி கூறினர்.

★

கோலாலம்பூரில் வரவேற்பு

கோலாலம்பூர் தமிழர்கள் சார்பில், ஈஸ்டர்ன் ஓட்டலில் 13—7—57 மாலை 5 மணிக்கு ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு திரு. கே. கே. சாமி தலைமை வகித்தார்.

வரவேற்புக் குழு சார்பில் திரு. ஆ. வீ. ஆண்டியப்பா திரு. பொன்னம்பலனருக்கு மாலையணிவித்தார்; செயலாளர் ஆழி. அருள்தாஸ் வாழ்த்திதழ் வாசித்தளித்தார்.

தோழர்கள் மா. சே. பரிமளம், ஈ. ரா. சண்முகம், சிரம்பான் இராம-சின்னையா, ஜி. வி. தேவர் ஆகியோர் திரு. பொன்னம்பலனரைப் பாராட்டி வரவேற்றுப் பேசினர்.

திரு. பொன்னம்பலனர், தான் சென்ற முறை (25 ஆண்டுகளுக்குமுன் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடன்) மலாயா வந்திருந்தபோது இருந்ததைவிட இப்பொழுது அறிவியக்கக் கருத்துக்கள் நல்ல முறையில் ஆக்கம் பெற்றிருப்பதைக் காண மகிழ்வதாகவும், தமிழர்கள் ஒன்றுபட்டு செயலாற்றி, மலாயாவில் விசுவாச மிக்க குடிமக்களாக வாழ வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.



சிங்கப்பூர் தமிழர் சீர்திருத்த சங்கத்தில் ‘சமூக சீர்திருத்தம்’ என்னும் பொருள்குறித்து திரு. அ. பொன்னம்பலனர் பேசும் காட்சி. ‘தமிழ் முரசு’ ஆசிரியர் கோ. சாரங்கபாணி, சிரம்பான் இராம-சின்னையா, தமிழர் பிரதிநிதித்துவ சபைப் பொதுச்செயலாளர் எம். எம். மாலை ஆகியோரைப் படத்தில் காணலாம்.

★

சிலேத்தார் தி. மு. க. வரவேற்பு

24—7—57 அன்று சிலேத்தார் தி. மு. கழகக் கிளையின் ஆண்டுவிழாவும், திரு. பொன்னம்பலனருக்கு வரவேற்புக் கூட்டமும் நடைபெற்றன.

விழாவுக்கு திரு. அ. முருகையன் தலைமை வகித்தார். விழாவையொட்டி நடனங்களும் நடந்தன. நடனமாடிய சிறுமிகட்கு திரு. இராம. சின்னையா பரிசுகள் வழங்கினர்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து திரு. பொன்னம்பலனர் பேசுகையில், மனிதனை மனிதனாக மதிக்கப் பாடுபடுவதும், மக்கள் சேவையைத் தெய்வீகமாக்குவதும், உயர்வு தாழ்வின்றி அனைவரும் சமம் என்றுரைப்பதும்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமுதாயப் பணி என்றும், ‘ஒன்றே குலம்; ஒருவனே தேவன்’ என்ற இலட்சியம் எங்கும் பரப்பப்படுகின்றன என்றும் எடுத்துரைத்தார்.

மற்றும், சமுதாய மூடநம்பிக்கைகளைக் கண்டித்தும், சாதி சமய வேறுபாடுகளை அகற்ற வேண்டுமென்றும் கூறினர்.

தலைமைவகித்த திரு. முருகையன் பேசுகையில், நல்லார் என்னும் சொல்லுக்குரியவர் பொன்னம்பலனர் என்றும், அத்தகைய நல்லாரைக் கண்டும் கேட்டும் மக்கள் பயனடையும் நன்னாள் இது என்றும் குறிப்பிட்டார்.

ஆர். ஏ. எப். சிலேத்தார் தமிழிசைக் குழுவினர் இசைவிருந்தளித்தனர். திரு. ஆர். பற்குணன் வரவேற்புரை கூறினர். திரு. ஆர். கிருஷ்ணசாமி வரவேற்புமடல் வாசித்தளித்தார். குமாரி மல்லிகா பழந்தமிழ்த் தாய்க்குலம் பற்றிப் பேசினர்.

சிறுமிகள் உஷாராணி, விஜயராணி சுப்பிரமணியம், ரத்தினகுமாரி சுப்பையா, பிரேமா ராமசாமி, பேபிமாலா கோவிந்தசாமி ஆகியோர் நடனம் ஆடினர். திரு. ஆர். எஸ். நாதன் நன்றி கூறினர்.

★

வள்ளுவர் இல்லத்தில்

சிங்கப்பூர் வள்ளுவர் இல்லத்தின் சார்பில் சிங்கப்பூர் துணையமைச்சர் திரு. எம். பி. டி. நாயர் தலைமையில 24—7—57-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலனர் பேசினர்.

வள்ளுவரின் திருக்குறள் தமிழர் சமுதாயம் சிறப்புற உலகிற்குக் கிடைத்த ஒரு பெருநூலென்று திரு. பொன்னம்பலனர் தம் உரையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் திருமதி அமுதவல்லியும் பேசினர். செயலாளர் திரு. பஞ்சாட்சரம் வள்ளுவர் இல்லத்தின் குறிக்கோள்களை விளக்கினர்.

★

கம்பார் வள்ளுவர் சொற்பயிற்சி மன்றத்தில்

28—7—57-ல், கேமரனில் நடைபெற்ற அ. ம. த. சங்கத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு திரும்புகையில் தோழர் அ. பொன்னம்பலனர் அவர்கள் தோழர்கள் த.வ.மு. மகாலிங்கம் சி. சுப்பையா, மு. சு. மணியம் ஆகியவர்களுடன் கம்பாரில் நடைபெற்ற அ. ம. த. சங்க வள்ளுவர் சொற்பயிற்சி மன்ற 2-வது ஆண்டுத் தேர்தல் கூட்டத்தில் கலந்துகொண்டு, சொற்பொழிவாற்றினர். இக்கூட்டத்திற்கு தோழர் த. வ. மு. மகாலிங்கம் தலைமை வகித்தார். அ. ம. த. பொதுச்செயலாளர் சி. சுப்பையா தசப்பாரேர்ட் அரசினர் தமிழ் பாடசாலை ஆசிரியர் திரு. அ. பழனியாண்டி, ஈப்போ திரு. மு. சு. மணியம் கம்பார் மு. குணசேகரம் ஆகியோர் பேசுகையில் திரு. பொன்னம்பலனரின் அறிவியக்க சேவைகளைப் பாராட்டினர்.

பிறகு திரு. பொன்னம்பலனர் தனக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து, மன்றத்தினருக்கு அறிவுரைகள் தந்தார். அடுத்து தேர்தல் முடிந்ததும் திரு. தே. பழனியப்பன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

★

அண்ணு வெற்றிக்குப் பாராட்டு

தமிழகப் பொதுத் தேர்தலில் அண்ணு வெற்றிபெற்றமைக் குறித்து அண்ணு அவர்களையும், தமிழகத் தி. மு. கழகத்தையும் பாராட்டுமுகத்தான் 19-5-57-ல் சிரம்பானில் (சிங்கப்பூர்) ஒரு தேநீர் விருந்து நடத்தப்பெற்றது.

இவ்விருந்துக்கு லெங்கெவ், பத்துசெப்ளாஸ், சிலியாவ், கோம்போக், சாகா, லாபு, போர்ட்டிக்ஸன், ஜெமிமா, செண்டயான், திம்யாவ்கார்த், முதலிய இடங்களிலிருந்தும் நகரப் பிரமுகர்கள் வந்திருந்தனர்.

விழாவிற்கு தே. தோ. தொ. ச. நெ. மா. முன்னுள் தலைவர் திரு. எஸ். சுப்பையா தலைமை வகித்தார்.

திரு. சி. ப. சாமிக்கண்ணன் வந்திருந்தோரை வரவேற்று, தமிழகத்தின் தேர்தலுக்கு நாம் என் பாராட்ட வேண்டும் என்ற வினாவெழுப்பி அதற்கான விளக்கமும் தந்தார்.

தோழர்கள் ம. க. கோவிந்தசாமி, பன்னீர்செல்வம், சுப. வேலாயுதம், ப. ஆ. முருகேசு, சிவம், எம். முத்து, எம். மணி, இலட்சுமணன், சின்னதுரை, வேலுசசாமி, இரா. தங்கு ஆகியோர் அண்ணு வெற்றி குறித்துப் பேசினர்.

அரிசி வாங்க அடையாளச் சீட்டு

டெல்லி யோசனைக்கு சென்னை எதிர்ப்பு

சென்னை, ஆக. 21—
நியாயவிலைக் கடைகளில் அரிசி முதலிய உணவுப்பொருள்கள் வாங்கிக்கொள்ள ஏழைக் குடும்பங்களுக்கு அடையாளச் சீட்டு தரலாம் என்ற டெல்லியின் யோசனையை சென்னை சர்க்கார் ஆதரிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இது அவசியமில்லை என டெல்லிக்கு சென்னை தெரிவித்துவிட்டதாம்!

இதனால், இலஞ்சப் பழக்கமும், வேறு பல நிர்வாக அசௌகரியங்களும் ஏற்படும் என்று சென்னை கூறியுள்ளதாம்!

தமிழகத்தில் சோஷலிஸ்டுகள் போராட்டம்

15 பெண்கள், 2 எம்.எல் ஏ.-க்கள் உட்பட 700 பேர் கைது

ஐதராபாத், ஆக. 20—
சென்னைக்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிட வேண்டுமென்ற முக்கிய கோரிக்கையுடன் சோஷலிஸ்டுக் கட்சியினர், தனித்து நடத்திவரும் போராட்டத்தில் மொத்தம் 700 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கட்சியின் தலைமைக் கழகம் அறிவித்திருக்கிறது.

அதில் மொத்தம் 15 பெண்களும், 2 சட்டசபை உறுப்பினரும் அடங்கியுள்ளனர்.

நீதிமன்றத்தை அவமதித்தனராம்!

4 சோஷலிஸ்டுகளுக்குத் தண்டனை

திருமங்கலம், ஆக. 19—
இந்நகர் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் சாலியா, கோபால், சேதுராமன், சிவனாண்டி என்னும் நால்வரும், இன்று தாலுகா அலுவலகத்தின் முன்பு மறியல் செய்ததன் விளைவாகப் போலீசாரால் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டனர்.

மாஜிஸ்திரேட் முன்பு வழக்கு விசாரணை நடைபெற்றபோது தோழர்கள் எதிர்வாதம் செய்தது நீதிமன்றத்தை அவமதிக்கும்வகையில் இருந்ததாக, அதற்கென மூன்றுவார சிறைத்தண்டனையும், மறியல் செய்ததற்காக ஒருவார சிறைத்தண்டனையும் அளித்து மாஜிஸ்திரேட் தீர்ப்பளித்தார். அவர்கள் அனைவரும் இன்று மதுரை சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

மாவட்டந்தோறும் மறியல் போராட்டம்!

அசாம் மாநிலமெங்கும் எண்ணெய்த் தொழிற்சாலை அமைக்கக்கோரி நடைபெற்றுவரும், மறியல் போராட்டத்தில் எண்ணற்றோர் கைது செய்யப்பட்டுவருகின்றனர்.

கௌஹாத்தியில் தினம் நடைபெறும் இந்தக் கிளர்ச்சியில் 19-ந் தேதியன்று கைது செய்யப்பட்ட ஆறுபேர் உட்பட இதுவரை 23 பேர்கள் கைதாகியுள்ளனர்.

அணு சோதனை பற்றி அமெரிக்கத் தலைவர்

வாஷிங்டன், ஆக. 22—
சில குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டும், சில பாதுகாப்புகளுக்கு உட்பட்டும் அடுத்த இரண்டு ஆண்டுக் காலத்துக்கு அணு ஆயுத சோதனைகளை நிறுத்துவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறது என்று தலைவர் ஐசனோவர் கூறியுள்ளார்.

காங்கிரஸ் எம். எல். ஏ. பதவி இழக்கிறார்

தேர்தலில் தில்லுமுல்லு செய்ததின் விளைவு

சில்சார், (அசாம்) ஆக. 20—
அசாம் காங்கிரஸ் எம் எல். ஏ. ஒருவர் பதவி இழந்திருக்கிறார்.

மௌலானா அப்துல் ஜலீல் என்ற அந்த உறுப்பினர், பதரிபூர் தொகுதியிலிருந்து அசாம் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்.

அவரது தேர்தல் செல்லாதென வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

மத அடிப்படையில் ஓட்டுக் கேட்டது; 'நவசக்தி' என்ற இதழில் ஒரு ஆட்சேபகரமான கட்டுரை வெளியிட்டது முதலிய சட்டவிரோதமான வழிகளை அவர் தேர்தலின்போது கைப்பிடித்தது உண்மை எனக் கண்ட தேர்தல் வழக்குமன்றம், அவரது தேர்தல் செல்லாது என்று தீர்ப்பளித்ததுடன், சட்டப்படி இன்னும் 6 ஆண்டுக்காலத்திற்கு தேர்தலில் நிற்கக்கூடாது எனவும் உத்தரவிட்டிருக்கிறது.

'சில பொருள்களுக்கு மீண்டும் விலை கட்டுப்பாடு'

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, ஆக. 21—
சில பொருள்களுக்கு விலைக் கட்டுப்பாடு (கண்ட்ரோல்) விதிக்கவேண்டி வரலாம் என்ற நிலை இருப்பதாக மத்திய தொழில் வர்த்தக மந்திரி மொரார்ஜி தேசாய் தெரிவித்திருக்கிறார்.

மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர் மேலும் பேசுகையில், வர்த்தகர்களும், தொழிலதிபர்களும், விலைகளை ஒரு எல்லையில் கட்டுப்படுத்துவதற்குத் தாங்களாகவே முன்வருவார்கள் என்ற நம்பிக்கை தரும் வகையில் கோரிக்கைக்குச் செவிமடுத்திருந்தாலும், சில பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டிய நிலைகள் ஏற்படலாம் என்றும் கூறியிருக்கிறார்.

'ஆந்திரத்தில் உரத் தொழிற்சாலை வேண்டும்'

உணவுப்பொருள் விசாரணைக் குழுவிடம் கோரிக்கை

கல்கத்தா, ஆக. 20—
"பலரும் கருதிக்கொண்டிருப்பதற்கு மாறாக, ஆந்திரப் பிரதேச மாநிலம் உணவுத் துறையில் பற்றாக்குறை மாநிலமாகவே இருந்துவருகிறது" என்று, ஆந்திர சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் பி. சுந்தரய்யா, உணவுப்பொருள் விசாரணைக் குழுவினிடத்தில் சாட்சியம் கூறுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐதராபாத் வந்துள்ள குழுவினிடத்தில், தொழிற்சங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள் பலவும் கருத்தறிவித்தன.

மாநிலத்திற்கு ஆண்டுதோறும் 3 இலட்சம் டன் உரம் தேவைப்படுகிறது என்றும், இதில் இப்போது 1,30,000 டன் மட்டுமே தரப்பட்டுவருவதாகவும், எனவே, தேவையைப் பூர்த்திசெய்ய ஆந்திரத்தில் ஒரு உரத் தொழிற்சாலை வைக்கவேண்டும் என்றும் ஒரு கருத்து, குழுவிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சம்பள விசாரணைக் கமிஷன்

உறுப்பினர்களில் ஒரு தென்னாட்டவர்

குழுவின் வேலைகளுக்கு வரம்பு

புதுடில்லி, ஆக. 21—
தபால்-தந்தி, மற்றும் மத்திய சர்க்கார் ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு இணங்கி, அறிவிக்கப்பட்ட இரண்டாவது சம்பளக் கமிஷனில் இடம்பெறும் உறுப்பினர்களின் பெயர்களையும், கமிஷன் விசாரணை செய்யவேண்டிய விஷயங்களையும் மக்கள் சபையில் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்திருக்கிறார்.

குழுவின் தலைவர், நீதிபதி ஜெகன்னாத தாஸ் என்பது அறிந்ததே.

வி. பி. காந்தி, என். கே. சித்தாந்தா, எம். எல். தாந்த்வாலா, திருமதி மரகதம் சந்திரசேகரன் ஆகியோர் உறுப்பினர்களாகவும், எல். பி. சிங் ஐ.சி.எஸ். என்பார் உறுப்பினர் - மற்றும் குழுவின் செயலாளராகவும் எச். எப். பி. பயஸ் என்பார் கூட்டுச் செயலாளராகவும் இருப்பர் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

விசாரணைக் குழு எனப் பெயரிடப்பட்டுள்ள இது, விசாரணை செய்து சிபாரிசு செய்ய வேண்டிய விஷயங்களாவன:—

(1) மத்திய சர்க்கார் ஊழியர்களின் வேலை நிலைகள், ஊதிய விகித அமைப்பு இவைபற்றி ஆராய்தல்; (2) இவற்றில் என்ன மாறுதல்கள் தேவை எனக் கண்டு சிபாரிசு செய்தல்—இப்படிச் செய்யும்போது, அடுத்துவரும் நிபந்தனைகளைக் கவனிக்க வேண்டும்; (3) வாழ்க்கை வசதிகள், சவுகரியங்கள் என்ற வகையில் ஊழியர்களுக்கு எந்த அளவு உதவலாம்; (4) தங்கள் சிபாரிசுகளைச் செய்கையில் குழுவினர், சரித்திரப் பின்னணி, நாட்டின் பொருளாதார நிலைகள், அபிவிருத்தித் திட்டங்களின் தேவைகள், மத்திய சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்கள், வேலை நிலைகள் இவற்றிற்கும் மாநில சர்க்கார் மற்றும் ஸ்தலஸ்தாபன ஊழியர்களின் சம்பள விகிதங்கள் வேலை நிலைகள் இவற்றிற்கும் உள்ள வேறுபாடுகள், மற்றும் இதர விஷயங்கள் இவற்றை மனதில் கொண்டு, விஷயங்களை ஆராய்ந்து சிபாரிசுகளை உருவாக்கவேண்டும்.

கமிஷன், இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்று கோரப்படுமானால், அது பற்றியும் சிபாரிசு செய்யலாம். அப்படிச் சிபாரிசு செய்கையில் குழுவினர், இடைக்கால நிவாரணம் தரப்பட வேண்டிய தேதியையும் குறிப்பிட வேண்டும்.

குழுவினர், தங்கள் விசாரணையின்போது தேவை என்று கருதுகிற எல்லா விஷயங்களையும், விபரங்களையும் சர்க்கார் தந்து உதவும். அதேபோல, மாநில சர்க்கார்களும், ஊழியர்களும் தேவையான விபரங்களைத் தந்து ஒத்துழைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கமிஷன், முடிந்த சீக்கிரத்தில் சிபாரிசுகளைத் தருமாறு கேட்கப்படுகிறது.

இவைதான், கமிஷனிடம் சர்க்கார் தந்துள்ள வேலை.

'இலஞ்சம் வாங்குவதில்லை'

பாட்டியாலா, ஆக. 19—
பஞ்சாப் சுங்கவரி இலாகா அதிகாரிகள் சுமார் 400 பேர், மக்களிடமிருந்து இனி 'இலஞ்சம் வாங்குவதில்லை' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டுள்ளனராம்!

மாநாடு ஒன்றில் கூடிய இவர்கள் மாநில நிதி மந்திரி மோகன்லால் தலைமையில் பிரமாணம் மேற்கொண்டனராம்!

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தலைமையில் "தென்றல்" கலை நிகழ்ச்சி

25—8—57 ஞாயிறு மாலை 6 மணிக்கு
தியாகராயநகர் வாணி மகாலில் நடைபெறும்
புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின்
சிறப்புச் சொற்பொழிவு
இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன்
குழுவினர் நடிக்கும்
புதிய நாடகம்
கண்ணதாசன், S. A. G. சாமி ஆகியோர் நடிக்கும்
ராஜ தண்டனை
ராஜ்-மலர் குழுவினரின் ராணி மனோரமா—நாடகம்
திரை பின்னணிப் பாடக, பாடகியர் பாட்டுக்கள்
சங்கீத டைரக்டர் எஸ். எம். சுப்பையா நாயுடு—வாத்தியக் குழு
டிக்கட் விபரம்: 5, 2, 1. நிறுவனர்: எஸ். வீரய்யா
25—8—57 காலை முதல் வாணி மகாலில் டிக்கட் விற்கப்படும்

அண்ணா அவர்களின் '1967'

மதுரையில் அண்ணா அவர்கள் 11—8—57-ல், '1967' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவை, அண்ணா அவர்களின் அனுமதியுடன் புத்தகமாக வெளியிட எல்லா ஏற்பாடுகளும் நடந்துவருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். முத்து,
மதுரை.

கழகக் கூட்டங்கள்

★

நீலிக்கோணும் பாளையம்:
தி. மு. க. ஆண்டு விழா
பிள்ளையார் திடலில்
24—8—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
மு. இராமநாதன்
எஸ். ஏ. இராசமாணிக்கம்

★

மேல்மங்கலம்:
திருவள்ளுவர் திடலில்
24—8—57 மாலை 6½ மணிக்கு
தலைவர்:
த. பாண்டியன்
பேசுவோர்:
க. அறிவழகன்
வீ. வெ. குருசாமி
சே. இராசரத்தினம்
சி. அ. முத்தையா

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

ஆகஸ்டு
24: மாலை: எட்டயபுரம்
இரவு: கோவில்பட்டி
25: மாலை: திருநெல்வேலி
இரவு: தச்சநல்லூர்
26: மாலை: கள்ளிக்குளம்
இரவு: ஏர்வாடி
27: மாலை: செங்கோட்டை
இரவு: தென்காசி
28: மாலை: சமயபுரம்
இரவு: சீரங்கம்

நெல்லை மாவட்ட நிகழ்ச்சிகளில் நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. ஆர். சுப்பிரமணியம் அவர்களும், திருச்சி மாவட்ட நிகழ்ச்சிகளில் திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் அன்பில் தருமலிங்கம் அவர்களும் கலந்துகொள்வார்கள்.

மாவட்டக் கழகங்களுக்குப் பதில்

வட்டார பஞ்சாயத்து யூனியன்கள்

அக். 31-ந் தேதி முதல் புதிய ஏற்பாடு பற்றி மந்திரி

திருச்சி, ஆக. 20—
மாநிலத்தில் உள்ள மாவட்டக் கழகங்கள், வரும் அக்டோபர் 31-ந் தேதியுடன் ஒழிக்கப்பட்டுவிடும் என்றும், அவற்றிற்குப் பதிலாக ஒரு தலைவரும், உப-தலைவரும் கொண்ட வட்டார பஞ்சாயத்து யூனியன்கள் நிறுவப்படும் என்றும் மந்திரி கக்கன், அரியலூர் பஞ்சாயத்து தந்த வரவேற்பின்போது கடந்த 20-ந் தேதியன்று குறிப்பிட்டிருக்கிறார்.

பல்கலைக் கழகங்களில் போதனா மொழி

பல்கலைக் கழகங்களில் போதனா மொழியாக பிரதேச மொழியைப் புகுத்துவதற்கான ஏற்பாடுகளை, சென்னை அரசாங்கம் திட்டவட்டமாக மேற்கொள்ளும் என்று சென்னை நிதி அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

அண்ணா சொற்பயிற்சிக் கூட்டம்

23—8—57 மாலை 6½ மணிக்கு, வண்ணை கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றத்தில் (59, சஞ்சீவராயன் கோவில் தெரு) தோழர் அ. தீனதயாளர் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; 'கடமை' எனும் பொருள் பற்றிப் பேசுவர்.

'நம் நாடு' இதழ் விற்பனையாளர் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் 'நம் நாடு' இதழை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை; நிபந்தனைகளுக்கு விண்ணப்பித்துக் கொள்க:

பூதலூர்
அறந்தாங்கி
திண்ணனூர்
மதுராந்தகம்
கல்லிடைக்குறிச்சி
இராஜசிங்கமங்கலம்

—நிர்வாகி: 'நம் நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத் துணைச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அருணோதயம் அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.